# ஓடிக்கொண்டே இருக்கும் உற்சாக நதிவாழ்க!

# உழைத்துக் கொண்டே இருக்கும் உதயநிதி..நீ வாழ்க!

திராவிட வரலாற்றுத்
தீபத்தைக் கரமேந்தி
இராப்பகல் பாராது
இளமைநலம் தீராது
குறிக்கோளில் மாறாது
குன்றைப்போல் நடந்துவரும்

அரியேறு தளபதியின்
அறப்போர்க் களமெங்கும்
சுற்றிச் சுழல்கின்ற
சூறாவளியே!

சுயமரியாதை வானில்
சுடர்விட்டுப் பிரகாசிக்கும்
சூரிய ஒளியே!

இளைஞர் உலகம்
நம்பிக்கையோடு
நாளும் போற்றும்
நாமாவளியே!
நீ வாழ்க!
நீடூழி வாழ்க!

இமயத்தை அதிர்விக்கும்
இன்னொரு தளபதியாய்
எங்கட்கு வாய்த்த
இதய நிதியே!

போகும் இடமெங்கும்
புகழ்நட்டு வருகின்ற
புதிய நிதியே!

சகலத்தையும் வழங்கும்
சங்கநிதி பதுமநிதி போல
எங்களுக்கு வாய்த்த
இளைய நிதியே!

தாய்மார்கள் நெஞ்சத்தில்
தனயனாய் வீற்றிருக்கும்
தங்கத் தமிழ்நிதியே!

தமிழ்நாட்டு அரசியலில்
புதியவிதி படைக்கப்
புறப்பட்டிருக்கும்
புன்னகை நிதியே..

ஓடிக்கொண்டே இருக்கும்
உற்சாக நதியே!
உழைத்துக்கொண்டே இருக்கும்
உதய நிதியே!
கூடிக்கொண்டே இருக்கும்
கொள்கைக் கூட்டத்தின்
அசைக்க முடியாத
அதிபதியே... நீ வாழ்க!

காவிரியாற்று மணலினும்
பலவாக
களங்கண்ட மூவேந்தர்
காவியப் புகழாக
பாரெலாம் வியக்கும்
சீரெலாம் பெற்றுச்
செந்தமிழைப் போல்
செழித்து வாழ்க!

மானம் மிகுந்த
மரபணுக்களின்
சேர்க்கையில் பிறந்த
சிங்கக் குருளையே!

வானமாய் விரிந்து
ஞானமாய்ப் பரந்து
நிதானமாய் வளர்ந்து
நித்திலக் குன்றமாய்
நிமிர்ந்து நிற்கும்
எங்கள் தளபதியின்
இதயத் துடிப்பே!

எவரும் கருதாத
எழுச்சி மழையாகி
மக்கள் உளங்களில்
மகிழ்ச்சி மழையாகி
மேன்மை தரவந்த
மேக வெடிப்பே!

ஒருகல் எடுத்து
உயர்த்திப் பிடித்து...
'சிறுகல் தானே' எனச்



சிரித்தவர் முன்னே
சிம்ம சொப்பனமாய்ச்
சிலிர்த்து நின்று,

செங்கல் மூலம்
செங்கோட்டைக்குச்
சேதிகள் சொன்ன
திராவிடப் புயலே!

சனாதன வாதத்தைச்
சாய்க்கும் முனைப்போடு
களத்தினில் இறங்கி–
கலைஞர் எடுக்கும்
கைவாளின் வேகத்தில்
சொற்களைத் தொடுத்துச்
சுடர்விட்ட ஏகலைவா..!

வருங்காலத் தலைமுறையை
வாழ்விக்க வந்திருக்கும்
வாலிபத் தலைவா!

அறம்போல வார்த்தைகளை
அளவாகத் தீட்டி
அளவில்லா வெற்றிகளை
அன்றன்றும் ஈட்டி

அங்கங்கும் இளைஞர்படை
அத்தனையும் கூட்டி
அனைவருக்கும் கொள்கைத்தீ
அடிநெஞ்சில் மூட்டி
'நாளைக்கும் நாம்'என்னும்
நம்பிக்கை ஊட்டி–
ஆட்சிக்கே மாட்சிதரும்
அழகுடன் காட்சிதரும்
அன்புமிகு சின்னவரே..!
மக்களின் மனமாளும்
மாண்புமிகு மன்னவரே!

இனத்துக்கும் மொழிக்கும்
இயக்கத்தின் மிளிர்வுக்கும்
தினத்துக்கும் போராடும்
தினவோடும் கனவோடும்
களமாடி நிற்கும்
கலைஞரின் பேரனே!
கருத்தியல் வீரனே!
பகைப்புலம் யாவையும்
நகைப்புலம் ஆக்கி
நடையிடும் தீரனே!

இலக்கைக் குறிவைத்து
இதயத்தில் நெறிவைத்து
அரசியல் பொறிவைத்து,
பெரியாரில் அண்ணாவில்
அசையாமல் அடிவைத்து
கலைஞரை முன்வைத்து
தளபதியைக் கண்வைத்து
அயிற்சுவை துயிற்சுவை
அனைத்தையும் பின்வைத்து–
மாபெரும் போர்க்களத்தில்
மலர்ச்சியுடன் நிற்கும் நீ...

ஆயிரம் பிறைகண்டும்
ஆகாயம் போல் வாழ்க!
பாயிரம் பாடுகிறேன்
பாராண்டு நீ வாழ்க!

தாயினும் அன்புடைய
தமையனாய் வாழ்த்துகிறேன்
வாயெலாம் மணக்கின்ற
வைணவத் தமிழ்கொண்டு
பாசப் பெருக்கோடு
பல்லாண்டு பாடுகிறேன்!

காற்றுக்கும் வழிகாட்டும்
கருத்தோட்டம் நீபெறுக!
நேற்றுக்கும் இன்றுக்கும்
நீரோட்டம் நீதருக!

வெற்றிகளின் தேசத்தில்
வேரோட்டமாய் எழுக!

பொழுதெல்லாம் பூக்கின்ற
பூந்தோட்டமாய் வளர்க!

காலத்தை வென்றெடுத்த
கண்ணியத் தலைவர்களின்
புண்ணியப் பாதையிலே
பொலிவோடு நடைபயில்க!

திக்களந்து பெருங்குரலில்
திராவிடத்தைப் பயிற்றுவிக்கும்
நம்முதல்வர் ஆசியுடன்
நல்லவனே நீ வாழ்க!

மகுடத்தில் ஒளிவீசும்
மாணிக்க மணியாகி
சிகரங்கள் பலதொட்டுச்
செம்மாந்த புகழ்பெற்று

வரலாற்றுப் பதிவோடு
வல்லவனே நீ வாழ்க!
வருகின்ற களமெங்கும்
வாகைசூடி நீ வாழ்க!



டாக்டர் **எஸ். ஜெகத்ரட்சகன்** எம்.பி.
மேனாள் ஒன்றிய இணையமைச்சர்

---

### நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் எழுப்பும் பிரச்சினைகளுக்கு ஒன்றிய அரசு பொறுப்போடு பதில் கூற வேண்டும்!

# நாடாளுமன்றம் முடங்குவதற்கு ஒன்றிய அரசே பொறுப்பு!

## புதுடெல்லியில் – மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா பேட்டி!

**புதுடெல்லி, நவ. 27 -**

**நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் நேற்று முன்தினம் ஒத்தி வைக்கப்பட்ட பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த மாநிலங்க ளவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா,"நாடாளுமன்றம் முடங்குவதற்கு ஒன்றிய அரசே பொறுப்பு" எனக் குற்றம் சாட்டினார்.**

**புதுடெல்லியில் திருச்சி சிவா எம்.பி. அளித்த பேட்டி வருமாறு:**

**கேள்வி:** இன்றைக்கு கூட்டத்தொடர் தொடங்கிய முதல் நாள். 10 நிமிடம்கூட நடந்திருக்காது என்று நினைக்கிறோம். உடனே ஒத்திவைக்கப்பட்டுவிட்டது. என்ன நடந்தது?

**பதில்:** இன்றைக்கு பல்வேறு கட்சியினர், பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக, முதலில் அதானி பிரச்சினை பற்றிப் பேச வேண்டும் என்றும், மணிப்பூரில் ஓராண்டிற்கு மேலாக தொடர்ந்து கலவரம் நீடிக்கிறது. எந்த சமரசமும் வரவில்லை, பிரச்சினை தீருவது போன்று தெரியவில்லை என்றும், உத்தரப் பிரதேசம் – சம்பல் பகுதியில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக உத்திரப் பிரதேச மாநிலத்தில் இருப்பவர்கள், வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவு என்று பல்வேறு பிரச்சினைகளுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டன.

பொதுவாக இது போன்ற ஒத்திவைப்புத் தீர்மானங்களை அவைத் தலைவர் அண்மைக் காலமாக ஏற்றுக் கொள்வதில்லை. ஒரு காலத்தில் நடந்திருக்கிறது. எனவே, அதைத் தொடர்ந்து வலியுறுத்தி நாங்கள் குரல் எழுப்பியபோது, முதலில் 15 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்ட அவை, அடுத்த முறை வந்தபோது எதிர்க்கட்சித் தலைவரை பேச அனுமதிக்கச் சொல்லி கேட்டுக் கொண்டிருந்தோம். அவர் அனுமதித்தார். ஆனால், அவருடைய பேச்சுகள் குறிப்பில் ஏறாது என்று சொல்லிக் கொண்டிருந்தார். அடுத்த முறையும் அதையே நாங்கள் வலியுறுத்தியபோது, எதிர்க் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அவர்கள் நின்று கொண்டே இருந்தார். அவரைப் பேச அனுமதிக்கவில்லை. மாறாக, அவையை நாளை காலை வரை ஒத்திவைத்திருக்கிறார்கள்.

**கேள்வி:** இந்தக் கூட்டத் தொடர் தொடங்குவதற்கு முன்பே, பிரதமர் அவர்கள் வெளியே பேசும்போது, எதிர்க் கட்சிகள்தான் அலுவல்களை நடக்கவிடாமல் தடுக்கிறார்கள். மக்கள் மீது அக்கறையே இல்லாத எதிர்க் கட்சிகளாக இருக்கிறார்கள். தோல்வியை மறைப்பதற்கு இது போன்ற விஷயங்கள் எல்லாம் செய்கிறார்கள் என்று கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்திருக்கிறார். முதலில் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று வேண்டுகோள் தான் விடுப்பார். ஆனால் இந்த முறை கண்டனம் தெரிவிக்கும் அளவிற்குச் சென்றிருக்கிறது. இதை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

**பதில்:** பிரச்சினையைத் தீர்க்க வேண்டியவர்கள் பாதிக்கப்பட்டவர்களை குறை சொல்வது போன்று இது இருக்கிறது. ஒரு அரசாங்கம் செய்யத் தவறுவதை சுட்டிக்காட்டுவதுதான் ஒரு எதிர்க் கட்சியின் கடமை.



குறிப்பாக, இப்போது மணிப்பூர் பிரச்சினை ஓராண்டு காலமாக நடந்து கொண்டிருக்கிறது. பாரதிய ஜனதா கட்சிதான் அங்கு ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. பிரதமர் அங்கு செல்லவில்லை; நடவடிக்கை எடுக்கவில்லை; பிரச்சினை ஓய்ந்த பாடில்லை; கொல்லப்படுகிறவர்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே இருக்கிறது; காணாமல் போனவர்கள் திடீரென்று பிணமாகக் கண்டெடுக்கப்படுகிறார்கள்; இது பற்றி எதிர்க் கட்சிகள் பேசினால், அவைக்கு குழப்பம் விளைவிக்கிறோம் என்று அர்த்தமா? இல்லை. இது பற்றிப் பேச வேண்டும் என்கிறோம்; அரசாங்கத்தின் சார்பில் அதற்கு ஒரு அறிக்கை தர வேண்டும் என்று கேட்கிறோம்; உள்துறை அமைச்சர் அது தொடர்பாக பேச வேண்டும் என்கிறோம்; அவர்கள் அதைச் செய்வதில்லை.

அதானி தொடர்பாக ஏற்கனவே ஹிண்டர்ன்பர்க் அறிக்கை வந்தது. கூட்டு நாடாளுமன்றக் குழு கேட்டோம். அவர்கள் செவி சாய்க்கவில்லை.

**எங்கள் ஜனநாயகக் கடமை!**

இது போன்று பல பிரச்சினைகளை நாங்கள் எழுப்புகிறபோது, இந்திய அரசியல் சட்டத்தின்படி, 'அமைச்சரவை என்பது நாடாளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டது. நாடாளுமன்றம் என்பது மக்களுக்குக் கட்டப்பட்டது.' எனவே, ஒரு பிரச்சினை நாட்டில் கொழுந்துவிட்டு எரிகிறது அல்லது மிக முக்கியமான பிரச்சினை, பத்திரிகைகள், காட்சி ஊடகங்களில் அது குறித்து பெரிய விவாதம் நடக்கிறபோது, அதைத் தெளிவுபடுத்த வேண்டிய ஒரே இடம், நாடாளுமன்றம்தான். அரசாங்கம் தன்னுடைய நிலையினை அங்கு சொல்வதும், எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி அங்கே விளக்கிப் பேசுவதும், மக்களுக்குத் தரும் விளக்கம். எனவே, ஆளுங்கட்சியாக இருக்கும் பாரதிய ஜனதா – அதன் தலைவராக இருக்கும் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், எங்களை குறை சொல்கிறாரே தவிர, ஏன் அவர் நாடாளுமன்றத்திற்கு உள்ளே வந்து பதில் சொல்ல மறுக்கிறார்.

எனவே, அவர்கள் நாடாளுமன்ற ஜனநாயகத்தை மதிப்பதில்லை. எங்கள் குரலை கேட்பதில்லை. நாங்கள் குரல் கொடுக்கிறோம் என்றால், அது மக்களின் சார்பாக. எங்களுடைய கடமை அதுதான். எனவே, சொல்லப்படுகின்ற பிரச்சினையை பார்க்க வேண்டுமே தவிர, யார் என்று பார்க்கக் கூடாது. அதற்குப் பரிவுடன் பதில் சொல்ல வேண்டியது, மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு அரசாங்கத்திற்கு இருக்கும் கடமை. தங்களுக்குப் பெரும்பான்மை இருக்கிறது என்ற ஒரே ஒரே காரணத்திற்காக- இப்போது அதுகூட இல்லை- வேறு கட்சியின் ஆதரவோடுதான் அவர்கள் இப்போது ஆட்சி நடத்துகிறார்கள். ஆனால், இடையில் நடக்கும் சில தேர்தல்கள் வெற்றிகள் எல்லாம் இதற்குக் காரணமே கிடையாது. நாடாளுமன்றம் என்றால், நடைபெற வேண்டிய முறையில் நடைபெற வேண்டும். பிரச்சினைகளை எழுப்புகிறபோது அதற்கு பதில் சொல்ல வேண்டும். அதுதான் ஒரு பொறுப்புள்ள – கண்ணியமான ஒரு அரசாங்கத்திற்கு உள்ள கடமை. எனவே, அதைச் செய்ய தவறுகிற இந்த அரசாங்கம் எங்களை குறை சொல்கிறார்கள் என்றால், மீண்டும் மீண்டும் நாங்கள் மக்களிடம்தான் சொல்ல வேண்டும். ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக வந்து விளக்கம் தர முடியாது. நாடாளுமன்றத்தில் விளக்கம் தரப்படுகிறது என்றால், அது நாடும் முழுவதும் அனைவருக்கும் சென்று சேரும். பத்திரிகையாளர்களுக்கும் அது குறித்து தெளிவு ஏற்படும். எனவே, இவர்கள் பிரச்சினைகளுக்கு பதில் சொல்ல மறுக்கிறார்கள். விளக்கம் அளிக்க விருப்பமில்லை. மாறாக, எங்களை விரல் நீட்டி குற்றங்கள் சொல்கிறார்கள் என்றால், நாங்கள் எங்கள் ஜனநாயகக் கடமையை மட்டும்தான் செய்கிறோம். அவர்கள் அதைச் செய்வதில்லை. தீர்ப்பளிக்க வேண்டியதும், சீர்தூக்கிப் பார்க்க வேண்டியதும் மக்களுடைய பொறுப்பு.

**கேள்வி:** இந்தக் கூட்டத் தொடரில் நிறைய மசோதாக்களை அவர்கள் நிலுவையில் வைத்திருக்கிறார்கள். முதல் நாளே இது மாதிரியான அமளி, வெளிநடப்பு, ஒத்திவைப்பு என்பது போன்று செல்கிறது. இந்தக் கூட்டம் எவ்வாறு செல்லும்?

**அடுத்த நடவடிக்கை!**

**பதில்:** அதாவது, முதல் நாள் இந்தப் பிரச்சினையை நாங்கள் எழுப்பி இருக்கிறோம். 16 மசோதாக்கள் காத்திருக்கிறது. நிதி மசோதா ஒன்றும் காத்திருக்கிறது. அதில் சில மிகவும் சாதாரணமாக – அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய – அதிக பிரச்சினை – பாதிப்பு – கருத்து வேறுபாடு இல்லாத மசோதாக்கள் இருக்கிறது. ஒன்று, இரண்டுதான் மிகவும் ஆழமாகப் பேச வேண்டும். வக்ஃபு தொடர்பான மசோதா கூட்டுக்குழுவின் ஆய்வில் இருக்கிறது. அந்த ஆய்வு அறிக்கை வந்ததற்குப் பின்னால், அது ஒரு வேளை எடுத்துக் கொள்ளப்பட்டால், அது தான் அதிக நேரம் விவாதிக்கப்பட வேண்டியதாக இருக்கும். அதைத் தவிர, எங்களுக்கு 'Short Duration Discussion' என்பதோ, கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பதோ இவர்கள் ஏற்றுக் கொண்டால்தான் செய்ய முடியும். எனவே, எங்களுடைய கவலையை – கோரிக்கையை – குறையை நாங்கள் இன்றைக்கு எடுத்து வைத்திருக்கிறோம். அவை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. என்ன காரணத்தினால் என்பதை இன்றைக்கு மக்கள் அறிவார்கள். எழுப்பப்பட்ட பிரச்சினைகள் குறித்து தெரியும்.

நாளை அரசியல் சட்டத்தை நாம் ஏற்று 75 ஆண்டுகளாவதை ஒட்டி, குடியரசுத் தலைவர் மைய மண்டபத்தில் பேசுகிறார். அங்குதான் அது விவாதிக்கப்பட்ட இடம். அங்குதான் அது ஏற்றுக்கொள்ளப்பட்ட இடம். அதற்குப் பின்னால், அடுத்த நாளிலிருந்து என்ன செய்வது என்பதை எதிர்க் கட்சிகள் ஒன்று கூடி உட்கார்ந்து நாங்கள் அடுத்த நடவடிக்கை குறித்து ஆலோசித்து முடிவெடுப்போம்.

இவ்வாறு திருச்சி சிவா எம்.பி. பேட்டியளித்தார்.



திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் உள்ள வறட்டு குளத்தை தூய்மை அருணை சார்பில், சீரமைக்கும் பணியினை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் தெ.பாஸ்கரபாண்டியன், திட்ட அலுவலர் இரா.மணி, டி.ஆர்.ஓ.ராமபிரதீபன், டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா விஜயரங்கன், இரா.ஜீவானந்தம் உட்பட பலர் உள்ளனர்.



வக்ஃப் வாரிய சட்டத் திருத்த மசோதாவை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டுக் குழு கூட்டம் முறைப்படி நடைபெறுவதில்லை என நேற்று முன்தினம் (25.11.2024) நாடாளுமன்ற மக்களவை சபாநாயகர் அவர்களைச் சந்தித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதாரத்துடன் புகார் அளித்தார்கள். மேலும் கூட்டுக் குழுவின் அலுவல் நாட்களை நீட்டித்துத் தருமாறு கோரிக்கையும் வைத்தார்கள். அப்போது இக்குழுவில் இடம்பெற்றுள்ள நாடாளுமன்றக் கழக கொறடா ஆ.ராசா எம்.பி. மற்றும் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா எம்.பி. ஆகியோரும் உடன் இருந்தனர்.